## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 368 நாள்: 08.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.08.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் கட்டுதல், புதிய கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகங்கள், பல்நோக்கு விளையாட்டுத் தளங்கள் (Play Turf), கபடி, கூடைப்பந்து மற்றும் கிரிக்கெட் ஆகியவற்றிற்கான பயிற்சி மைதானங்கள், நூலகங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், இரத்தச் சுத்திகரிப்பு நிலையங்கள், சமூக நலக் கூடங்கள், நடைபாதை வளாகங்கள், மார்க்கெட், நவீன பேருந்து நிறுத்த நிழற்குடைகள் மற்றும் Gig தொழிலாளர்களுக்கான ஓய்வறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டுதல்,

குழந்தைகள் மையங்களில் கற்றல் மற்றும் விளையாட்டுத் தொகுப்புகள் வழங்குதல், குளங்கள் மேம்படுத்துதல், சென்னை பள்ளிகளை மேம்படுத்துதுல், விளையாட்டு வசதிகளை மேம்படுத்துதல், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கால்பந்து மைதானங்களின் உபகரணங்களை மேம்படுத்துதல், பசுமைப் பரப்பினை அதிகரிக்க மரக்கன்றுகள் நடுதல், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டுதல், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக ஆணையாளர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் ஆணையாளர் அவர்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், திட்ட அறிக்கை நிலையில் உள்ள பணிகள், ஒப்பந்த நிலையில் உள்ள பணிகள் குறித்து விரிவாக கேட்டறிந்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், மேற்கொள்ள வேண்டிய பணிகளை விரைந்து தொடங்கிடவும், அனுமதியின்றி கட்டடப் பணிகள் மேற்கொள்ளுதல், குடியிருப்பு அல்லாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்

குடியிருப்பு கட்டடங்கள் ஆகியவற்றினை தொடர்ந்து கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கும் மழைநீரினை உடனடியாக வெளியேற்றும் வகையில் பல்வேறு குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புகள், மழைநீர் சேகரிப்புத் தொட்டி மற்றும் நீரிறைப்பான், நிவாரண மையங்கள், சமையல் கூடங்கள் ஆகியவை தயார்நிலையில் இருத்தல், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல், கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், விழும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை வெட்டுதல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆணையாளர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**